# இவர் யாரோ

**அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். (மாற்கு 4:41)**



இங்கு [இவர் யாரோ] என்று கூறியவர்கள் படகில் இருந்த ஆண்டவருடைய சீஷர்களே. ஆண்டவர் செய்த அற்புதங்களை இதற்கு முன்னும் அவர்கள் பார்த்திருக்கின்றனர், ஆனால் அப்போதெல்லாம் உண்டாகாத ஒரு பிரமிப்பு இப்பொழுது காற்றையும் கடலையும் அவர் அதட்டியபோது உண்டானது. ஆம், அவரை ஒரு போதகராக, நோய்களை சுகமாக்குபவராக, அற்புதங்களை செய்பவராக அவர்கள் கண்டபோது உண்டாகாத ஒரு பிரமிப்பு அவர் இயற்கைக்கு கட்டளையிட்டு அதை நடத்தினபொழுது உண்டானது. ஆம், அவர் போதகர் மட்டுமல்ல, அற்புதங்களை செய்பவர் மட்டுமல்ல, அவர் மெய்யான தேவன் என்பதை வெளிப்படுத்தும் விதமாய் இச்செயல் உள்ளது. ஆனால் அதை அவர்களால் சரியாக புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஆம், தங்கள் மனதில் இவ்வளவு காலம் நினைத்திருந்த ஒரு நிலையை விட ஆண்டவராகிய இயேசு பன்மடங்கு உயர்ந்தவர் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. இன்றைய நிலையும் இப்படித்தான், ஆண்டவர் அற்புதம் செய்கிறவர், நன்மை தருகிறவர், நோய்களை சுகமாக்குகிறவர் என்று பறைச்சாற்றும் பொழுது, அதை ஏற்றுக்கொள்ளும் மக்கள், அவரே மெய்யான தேவன், வேறொருவரும் இல்லை என்று கூறும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். அவர் செய்த அற்புதங்களை எல்லாம் பார்த்தபொழுது சிஷர்கள் இவர் யாரோ என்று கேட்கவில்லை. ஆனால் இயற்கைக்கு ஆணையிட்டபொழுது, இவரை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியது இன்னும் அதிகமாயிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டனர்.

**யோ 19:10** இல் **"அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்."** இங்கு ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தின் கீழ் பணிபுரிகிறவனாக, அந்த

அதிகாரத்தோடு தன் கட்டுபாட்டில் இருக்கும் யூதேயா தேசத்தில் தான் எதையும், யாருக்கும் செய்ய முடியும் என்ற மமதையோடு பிலாத்து பேசினான். ஆனால் ஆண்டவரோ **"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது " (யோா 19:11)** என்றார். ஆம் இங்கு பிலாத்துவின் அதிகாரத்தின் கீழ் விசாரணை நடைபெறவில்லை, ஆண்டவருடைய சித்தத்தின், திட்டத்தின் கீழ்தான் பிலாத்து நியமிக்கப்பட்டு ஆண்டவரை விசாரித்து கொண்டிருக்கிறான்.

ஆண்டவரே ஒரு தடவை ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று தம் சிஷர்களிடம் கேட்டார். ***"அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்; பேதுரு பிரதியுத்தரமாக: நீர் கிறிஸ்து என்றான்."*** **(மாற் 8:28,29)**, ஆம் அவர் மனுகுலத்தை மீட்டு இரட்சிக்க இம்மானுவேலராய் அபிஷேகிக்கப்பட்டவர். அவர் கிறிஸ்துவாகிய மேசியா, நம்மை மீட்டு இரட்சிப்பவர். இந்த சத்தியமே இப்பொழுது உலக முழுவதிலும் அறிவிக்கப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசுவே, கிறிஸ்துவாகிய மேசியா என்பதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை ஆண்டவரே **யோவான் 4ஆம்** அதிகாரத்தில் சமாரிய ஸ்தீரியை சந்திப்பதின் மூலம் கற்றுக் கொடுத்துள்ளார். எனவே இப்பொழுது கவனமாக ஆண்டவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும், அதற்கு சமாரிய ஸ்திரீ எழுப்பிய கேள்விகளையும், அதற்கு ஆண்டவர் பதிலளித்து அவளை இரட்சித்த விதத்தையும் நாம் காண்போம்.

**யோா 4:8** இல் ***"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்."***, இங்கு உண்மையிலேயே ஆண்டவர் பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் இவ்வாறு கேட்டார் **(யோா 4:6)**. ஆனால் அதற்கு பின்பு, ஒரு அற்புதமான நிகழ்வை நிகழ்த்தவும் இவ்வாறு கேட்டார். அதற்கு ***"யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்."*** **(யோா 4:9)**. ஆம் இங்கு முதலில் ஆண்டவரை ஒரு சாதாரண யூத மனிதராக அந்த ஸ்திரீ கண்டாள்.

**அப்பொழுது "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." (யோா 4:10)**. இங்கு ஆண்டவர், தான் சரீர தேவையை மட்டுமல்ல, ஆத்ம தேவையையும் பூரணமாய் சந்திக்க வல்லவர் என்பதை வெளிப்படுத்துகிறார். இங்கு <u>உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார்</u> என்ற வார்த்தை மிக முக்கியமானது. இங்கு ஆண்டவரின் ஒரே நோக்கம் தான் யார் என்பதை சமாரிய ஸ்திரீ அறிய வேண்டும் என்பதாகும்.

**யோா 4:11,12** வசனங்களில், ***"அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்."*** முன்பு நீர் என்று கூறி பேச்சை தொடங்கிய அந்த ஸ்திரீ, இப்பொழுது ஆண்டவரே என்று கூறி, மேற்க்கண்ட வார்த்தைகளை கூறுகிறாள். தாம் யாக்கோபை காட்டிலும்

பெரியவர் என்பதை அவள் அறிந்து கொள்ள **யோ 4:16-18** வசனங்களில் **“இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.”** தன் வாழ்வின் நிலைமைக்குறித்து வெளிப்படுத்தியதால், சாதாரண யூத மனிதராக பின்பு ஆண்டவராக அவரை பார்த்த ஸ்திரீ, **“ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.” (யோ 4:19)** என்றாள்.

ஆனால் ஆண்டவர் இத்தோடு நிற்கவில்லை, தான் யார் என்பதை அவள் அறிந்து கொள்ள வேண்டும் என்று இன்னும் பல ஆவிக்குரிய காரியங்களை அவளுக்கு விளக்குகிறார். அவளாகவே, **“கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.” (யோ 4:25).** அப்பொழுது, **“அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.” (யோ 4:26)**. ஆம், இவ்வளவு காரியங்களையும் அவளிடம் தெளிவாய் கூறிய பிறகு தாமே அந்த மேசியா என்பதை நேரடியாகவே கூறினார். இதுவே ஆத்தும ஆதாயம் செய்ய, இயேசு யார் என்பதை அறிவிக்க ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் **“அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.”, (யோ 4:28-30)**. இதுவே இந்த கடைசி காலத்திலும் வேகமாக பல கோடி மக்களுக்கும் சுவிஷேசம் சென்றடைய சரியான ஓர் உதாரணமாகும். **யோ 4:39** இல் **“நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.”**, இதில் **சாட்சி சொன்ன** என்ற வார்த்தை மிக முக்கியமானதாகும். ஆண்டவர் சந்தித்தது, ஒரு சாதாரண ஸ்திரீயை தான், அதுவும் அவளோடு ஒரு சில நிமிடங்கள் தான் பேசினார். ஆனால் தான் யார் என்பதை அவளுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினபடியால், ஒரு சரியான சாட்சியாய் மாறினாள். அதன் மூலம் அநேகர் ஆண்டவரின் வார்த்தையை கேட்டனர்.

மேலும் **யோ 4:41,42** வசனங்களில் **“அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.”** அவள் மூலமாய் மற்ற சமாரியர்களையும் சந்திக்க வாய்ப்பு கிடைத்த பொழுது, அவர்களுக்கும் சரியான உபதேசத்தை கூறினதால், அந்த பட்டணத்தார் அனைவரும் அவரே **மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர்** என்று அறிந்து விசுவாசித்தனர். ஆம் யூத மனிதராய் பார்க்கபட்ட இயேசுவாகிய தம்மை உலக இரட்சகராக அவர்கள் காணச்செய்தார்.

ஆம் இன்றும் ஆண்டவருக்காக ஆத்தும ஆதாய ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் பின்பற்ற வேண்டிய ஒரு அழகான மாதிரியை ஆண்டவரே இங்கு மிக நேர்த்தியாக செய்து காட்டியுள்ளார். எனவே ஆண்டவரை வெறும் அற்புதங்களை செய்கிறவராக மட்டும் போதியாமல், அவர் ஆண்டவர், சகலத்தையும் அறிந்த தீர்க்கதரிசி, கிறிஸ்துவாகிய உலக இரட்சகர், ஒன்றான மெய் தேவன் என்பதை அறிவிக்க

வேண்டும். அப்பொழுது மட்டுமே, கிறிஸ்து யார் என்பதை மனு குலம் அறிந்து கொள்ளும். ஆண்டவர் தாமே அதை செய்ய நம்மை பெலப்படுத்துவாராக, ஆமென், அல்லேலூயா.